FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165104

1. District : திருநெல்வேலி மாவட்டம் PS: ஊழல் தடுப்பு மற்றும் காவல்நிலையம்கண்காணிப்புபிரிவு Year: 2025 ஆண்டு FIR No.: 07/2025 மு.த.அ. எண் Date: 17.10.2025 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7(a) r/w

(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.10.2025 Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.00 hrs to 17.10.2025 Time : நேரம் 16.40 hrs 11.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.10.2025 Time : நேரம் 11.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி செயற்பொறியாளர் அலுவலகம், கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி. 3.5 கி.மீ வட கிழக்கு

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.தங்கராஜ்

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.T.மகாலிங்கம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : நாட்டினம்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் 27.03.1970

Place of Issue : வழங்கப்பட்ட இடம் இந்தியன்

--

(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர்

(g) Address : முகவரி திருநெல்வேலி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையுளில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு.ஜோசப் இ. ரன்ஸ்டெட் பிரீஸ், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், திருநெல்வேலி, 2) திரு.நா.சதாசிவன், இளநிலை பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு, வண்ணார்பேட்டை, செயற்பொறியாளர் அலுவலக வளாகம், திருநெல்வேலி. 3) திரு.பி.செல்வம், அலுவலக உதவியாளர், பொதுப்பணித்துறை (கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) செயற்பொறியாளர் அலுவலகம், திருநெல்வேலி மற்றும் 4) திரு.க.ராமமுருகேசன் (எ) சதீஷ், த/பெ. திரு.மா.கதிரேசன், கதவு எண்.59, சிதம்பர நகர், K.T.C. நகர், கீழநத்தம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 17.10.2025-ம் தேதி சுமார் 11.00 மணிக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 16.10.2025-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் M.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம், பெறுனர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. அய்யா, பொருள்: திருநெல்வேலி மாவட்டம், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், செயற்பொறியாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. திருநெல்வேலி மாவட்டம், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், செயற்பொறியாளர் அலுவலகத்தில் செயற்பொறியாளராக பணிபுரியும் திரு.ஜோசப் இரன்ஸ்டெட் பிரீஸ் அவர்கள், அரசு கட்டிடங்கள் ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணி செய்வதற்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பணம் வசூல் செய்து, மேற்படி ஒப்பந்ததாரர்கள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணத்துடன் அவர் மேற்படி அலுவலகத்தில் இருந்து

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Inspr. Ix. Rakin Selva Singh to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17.10.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

17/10/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 17.10.25 12.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் E.MCCLARINE ESKHOL
Rank: நிலை A.D.S.P.....No. எண் ...V.S AC
Tirunelveli.

Continuation of Tirunelveli Vigilance and Anti Corruption Crime No.07/2025:-

அவரது அலுவலக வாகனமான TN 72 G 1161 பொலேரோவில் புறப்பட இருந்தவரை கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில், திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் மேற்படி பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், செயற்பொறியாளர் அறையில் வைத்து மாலை 16.40 மணி முதல் 20.30 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த செயற்பொறியாளர் திரு.ஜோசப் இ.ரன்ஸ்டெட் பிரீஸ் என்பவரிடமிருந்து ரூ.2,35,100/-ம், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி, வண்ணார்பேட்டை, செயற்பொறியாளர் அலுவலக வளாகம், கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு, இளநிலை பொறியாளர், திரு.நா.சதாசிவன் என்பவரிடமிருந்து ரூ.51,100/-ம், மேற்படி செயற்பொறியாளர் திரு.ஜோசப் இ.ரன்ஸ்டெட் பிரீஸ்-ன் அலுவலக உதவியாளர் திரு.பி.செல்வம் என்பவரிடமிருந்து ரூ.4,100/-ம் மற்றும் மேற்படி செயற்பொறியாளர் திரு.ஜோசப் இ.ரன்ஸ்டெட் பிரீஸ்-ன் வாகன ஓட்டுநர் (தனிநபர்) திரு.க.ராமமுருகேசன் (எ) சதீஷ் என்பவரிடமிருந்து ரூ.6,200/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.2,96,500/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாகவோ அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை நேற்று (16.10.2025) மாலை 16.40 மணிக்கு ஆரம்பித்து இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த செயற்பொறியாளர் திரு.ஜோசப் இ.ரன்ஸ்டெட் பிரீஸ் மற்றும் மூன்று தனிநபர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம். (M.தங்கராஜ்) துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம். (17.10.2025) Sir, Received the complaint on 17.10.2025 at 11.00 hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.07/2025 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 106 BNSS on 17.10.2025 at 11.00 hrs Sd.E.Mcclarine Eskhol, Additional Superintendent of Police, V&AC, Tirunelveli dt 17.10.2025. Proceedings பின்வருமாறு:- 16.10.2025-ம் தேதி திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தின் கிழக்கு பக்கம் உள்ள

பொதுப்பணித்துறை வளாகத்தின் உள்ளே தென்புறம் அமைந்துள்ள பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், திருநெல்வேலி செயற்பொறியாளர் அலுவலகத்தை திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : 1) திரு.M.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். 2) திரு.E.மெக்லரின் எஸ்கால், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. இன்று 16.10.2025-ம் தேதி மாலை சுமார் 15.30 மணிக்கு திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுகா, திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தின் கிழக்கு பக்கம் உள்ள பொதுப்பணித்துறை வளாகத்தின் உள்ளே தென்புறம் அமைந்துள்ள பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், செயற்பொறியாளர் மற்றும் அவரது அலுவலக ஊழியர்கள் அரசு கட்டிடங்கள் ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணி செய்வதற்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் மற்றும் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 16.15 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0990-ல் புறப்பட்டு பாளையங்கோட்டை பேருந்து நிலையம் வழியாக வந்து சுமார் 16.30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தின் கிழக்கு பக்கம் உள்ள பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தின் உள்ளே வந்து தென்புறம் உள்ள செயற்பொறியாளர் அறை மற்றும் அதனை ஒட்டியுள்ள அலுவலகங்களை தொடர்ந்து கண்காணித்ததில் செயற்பொறியாளர் திரு.ஜோசப் இரன்ஸ்டெட் பிரீஸ் என்பவர் அவரது வழக்கமான அலுவலை முடித்துக் கொண்டு அவரது அலுவலக அறைக்கு வெளியே உள்ள வராண்டாவில் மேற்கு பார்த்து நின்ற அவரது அலுவலக வாகனமான TN 72 G 1161 பொலேரோவின் அருகே நின்று பின்னால் இன்னாரென்று தெரிந்து கொண்ட இளநிலை பொறியாளர் திரு.சதாசிவம், மேற்படி வாகன ஓட்டுநர் திரு.ராமமுருகேசன் (எ) சதீஸ் மற்றும் அவரது அலுவலக

உதவியாளர் திரு.செல்வம் ஆகியோருடன் நின்று பேசிக் கொண்டிருந்தவர் அருகே சுமார் 16.40 மணியளவில் சென்று திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் தன்னையும் மற்றும் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மைக்கலின் எஸ்கால் அவர்களையும் செயற்பொறியாளர் திரு.ஜோசப் இ.ரன்ஸ்டெட் பிரீஸ் என்பவரிடம் அறிமுகம் செய்துவிட்டு செயற்பொறியாளர் அறையினை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரத்தை அவரிடம் தெரிவித்து, அவருடன் பேசிக் கொண்டிருந்த மேற்கண்ட மூன்று நபர்களையும் மேற்படி செயற்பொறியாளர் அறைக்கு அழைத்து வந்து, செயற்பொறியாளரை அவரது இருக்கையில் அமர சொல்லிவிட்டு மற்ற மூன்று நபர்களையும் அங்கிருந்த நாற்காலிகளில் அமரச்செய்துவிட்டு மேற்படி அலுவலக அறை சோதனை செய்யப்பட்டது. பின்னர் மேற்படி செயற்பொறியாளர் திரு.ஜோசப் இ.ரன்ஸ்டெட் பிரீஸ் என்பவரை துணை ஆய்வுக்குழு அலுவலர் விசாரணை செய்ய, அவர் தான் திருநெல்வேலி கோட்டம், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், செயற்பொறியாளராக 24.04.2025-ம் தேதி முதல் பணியுரிந்து வருவதாக சொன்னார். மேலும் அவரை சோதனை செய்ய, அவர் அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.8,000/-ம், அவரது பேண்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணம் ரூ.2,800/-ஐ மற்றும் அதனோடு இருந்த கவரில் இருந்த பணம் ரூ.50,000/-ம் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவரது அறையில் கிழக்கு பார்த்து இருந்த அவரது இருக்கைக்கு இடதுபுறமாக இருந்த அவரது பிரவுன் கலர் லெதர் பேக்கின் சைடு அறையில் இருந்த ரூ.1,800/- மற்றும் அதே பேக்கில் நடுஅறையில் இருந்த ரூ.1,00,000/-ம் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி ரூ.1,800/- ஆனது, தான் இன்று காலையில் வைத்திருந்த ரூ.2,000/-ல், ரூ.200/- செலவு செய்தது போக மீதத்தை தனது சொந்த செலவுக்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும் அவரது பிரவுன் கலர் லெதர் பேக்கிற்கு அருகே மேற்கு பக்கம் இருந்த அவரது கருப்பு கலர் லஞ்ச் பேக்கில் இருந்து ரூ.72,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து செயற்பொறியாளர் திரு.ஜோசப் இ.ரன்ஸ்டெட் பிரீஸ் என்பவரிடம் கேட்டபோது அவர் அதற்கு சரியான முகாந்திரம் சொல்லாததால் அவர் ஆஜர் செய்த மொத்த பணம் ரூ.2,35,100/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது அறையில் இருந்த மற்ற ரேக்குகளை சோதனை செய்த போது ஆவணங்கள் மட்டுமே காணப்பட்டது. வேறு பணம் எதுவும் கிடைக்கவில்லை. பின்னர் மேற்படி அறையில் இருந்த இளநிலை

பொறியாளர் திரு.சதாசிவம் என்பவரை துணை ஆய்வுக்குழு அலுவலர் விசாரித்து சோதனை செய்த போது அவர் அவரது கையில் இருந்த வெள்ளை நிற கேரி பேக்கில் இருந்து ரூ.41,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் தொடர்பாக விசாரணை செய்த போது தற்காலிக பணியாளர்களுக்கு மாத ஊதியம் கொடுப்பதற்காக செயற்பொறியாளர் திரு.ஜோசப் இ.ரன்ஸ்டெட் பிரீஸ் அவர்கள் தந்த பணத்தினை. பிரித்து வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்த போது அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் இருந்து ரூ.10,100/-ம் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் தற்காலிக பணியாளர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அது குறித்து அவர் தெரிவித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லாத காரணத்தினால் மேற்படி மொத்த பணம் ரூ.51,100/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வெள்ளை நிற கேரி பேக் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அதே அறையில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.செல்வம் அவர்களை விசாரித்து சோதனை செய்த போது அவர் தனது சட்டை பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.4,100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் சொல்லாததால் அவர் ஆஜர் செய்த பணம் ரூ.4,100/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே அறையில் இருந்த செயற்பொறியாளரின் தற்காலிக ஓட்டுநரான என்பவரை விசாரித்து சோதனை செய்த போது அவர் தனக்கு வழங்கப்பட்ட இரண்டு அடையாள அட்டைகளை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி இரண்டு அடையாள அட்டைகளும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை சோதனை செய்த போது அவரது பேண்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணம் ரூ.2,200/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.2,200/- குறித்து கேட்க அவர் தனது செலவுக்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவரது கையில் இருந்த டைரியில் சதீஷ் என்று எழுதி வைக்கப்பட்டிருந்த வெள்ளை நிற கவரில் பணம் ரூ.2,000/- இருந்தது. அதுகுறித்து கேட்க மேற்படி பணத்தை தான் ஓட்டி வரும் அரசு வாகனத்திற்கு டீசல் போடுவதற்கு செயற்பொறியாளர் அவர்கள் தந்ததாக சொன்னார். மேலும் மேற்படி டைரியில் அருள் என்று எழுதிய மற்றொரு வெள்ளை நிற கவரில் பணம் ரூ.2,000/- இருந்தது. மேற்படி பணம் ரூ.2,000/-ம் குறித்து அவரிடம் கேட்க அதனை செயற்பொறியாளர் அவரது நாகர்கோவில் அலுவலக வாகன ஓட்டுநரான அருள் என்பவருக்கு டீசல் போடுவதற்கு கொடுப்பதற்காக தன்னிடம் தந்ததாக சொன்னார். மேற்படி பணம் குறித்து அவர் தெரிவித்த விளக்கம் ஆனது ஏற்றுக்கொள்ளதக்கதாக

இல்லாத காரணத்தினால் மேற்படி மொத்த பணம் ரூ.6,200/- மற்றும் சதீஷ், அருள் என்று எழுதப்பட்ட இரண்டு வெள்ளை நிற கவர்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி செயற்பொறியாளர் அறையானது, பொதுப்பணித்துறை வளாகத்தின் தெற்கு பக்கம் வடக்கு பார்த்து அமைந்துள்ளது. மேற்படி அறையானது சுமார் 15 x 12 அடி கொண்ட அறையாகும். மேற்படி அறையின் மேற்கு பக்கம் கிழக்கு திசை பார்த்து செயற்பொறியாளரின் இருக்கை மற்றும் அதன் முன்பு மரமேஜை மற்றும் நாற்காலிகள் காணப்பட்டது. செயற்பொறியாளரின் இருக்கைக்கு பின்புறம் மூடப்பட்ட ரேக்குகள் காணப்பட்டது. மேற்படி அறைக்கு மேற்கு பக்கம் கழிப்பறை உள்ளது. அதன் வாசல் செயற்பொறியாளர் அறையின் வடமேற்கு மூலையில் உள்ளது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று 16.10.2025-ம் தேதி இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். M.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் சிலர்.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli District and original FIR were sent to the court of Hon'ble Principal District Sessions Judge, Tirunelveli and copies sent to concerned Higher Officials.

17/10/25
ADSP, VSAC
Tirunelveli.